## தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

## (ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

**[அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./TR/ 5/ 2- 3, 2007 செப்டம்பர் 8ஆம் நாளிட்டது]**

**[கடித எண் த.மி.ஒ.ஆ./AD(L)/F.அறிவிக்கைகள் /D.846/2007]**

2003ஆம் ஆண்டு மின்சாரச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181 ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 61 ஆம் பிரிவின்படி, 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதத்தினை நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறைவிதிகள், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் குறித்துரைக்கப்படுவதாலும் மற்றும் 2005 ஆகஸ்டு, 3ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதிழின் (பகுதி VI பிரிவு–2 பின்னிணைப்பில்) அது வெளியிடப்பட்டிருப்பதாலும்,

மற்றும், மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டணவீத விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளில் செய்யப்படும் திருத்தங்களை மேலும் கவனத்திற்கு எடுத்துக்கொண்டு ஒழுங்குமுறை விதிகளைத் திருத்தம் செய்வது அவசியமெனக் கருதுவதாலும்,

இப்போது, அதற்காக, 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181 ஆம் பிரிவின்படி, அதற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும், மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்தி முந்திய வெளியீட்டிற்குப் பின்பும், இதன்மூலம், (இதன்பின்பு இதில் முதன்மை ஒழுங்குமுறை விதிகள் என்று குறிப்பிடப்படும்) 2005ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டண வீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளுக்குப் பின்வரும் திருத்தத்தைச் செய்கிறது :-

**2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின்கட்டண வீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) (மூன்றாம் திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள்.**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(i) இந்த ஒழுங்குமுறை விதிகள், 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டணவீதம் நிர்ணயிப்பதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) (மூன்றாம் திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள், என்று வழங்கப்பெறும்.

(ii) இந்த ஒழுங்குமுறை விதிகள், தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 6ஆம் ஒழுங்குமுறை விதியைத் திருத்தம் செய்தல்**

முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 6ஆம் ஒழுங்குமுறை விதியின் (7) ஆம் உள்– ஒழுங்கு முறை விதியின் (i) ஆம் கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படலாம், அதாவது :-

“ (i) (அ) மின் உற்பத்தி செய்யும் நிறுமம் அல்லது உரிமம்தாரார், இந்த ஒழுங்குமுறை விதிகளின் பிற்சேர்க்கை – I ன் படி, சட்டமுறையான தணிக்கையாளர்களால், உரியவாறு தணிக்கை செய்யப்பட்டு, உறுதிச்சான்றிடப்பட்ட விண்ணப்பம் செய்த தேதி வரை அல்லது விண்ணப்பம் செய்ததற்கு முந்திய தேதி வரை உள்ளபடியே செய்ய நேர்ந்த மூலதனச் செலவினங்களின் அடிப்படையில் முன்னமே எதிர்பார்த்து திட்ட நிறைவேற்றத் தேதிக்கு முன் தற்காலிக மின்கட்டண வீதம் நிர்ணயிப்பதற்காக விண்ணப்பம் செய்யலாம் மற்றும் தற்காலிக மின்கட்டணவீதம், அந்தந்த மின் உற்பத்தி நிலையத்தின் அல்லது மின் செலுத்தல் அமைப்பின் மின்தொடர் அல்லது துணை நிலையத்தின் வணிக இயக்கத் தேதியிலிருந்து வசூலிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) தற்காலிக மின்கட்டணவீதம் அல்லது தற்காலிகப்பட்டியல்

கட்டணம் மின் உற்பத்தி நிறுமத்தால் அல்லது மின் செலுத்தல் உரிமம்தாரரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் அல்லது ஆணையத்தால் தாமாக முற்பட்டோ அல்லது பிறவாறாகவோ ஆணையத்தால் அனுமதிக்கப்படும் போதெல்லாம், ஆணையத்தால் ஒப்புதலளிக்கப்படும் இறுதி மின் கட்டணவீதத்திற்கு எதிராகக் சரிக்கட்டப்படுதல் வேண்டும் :

இருப்பினும், வசூலிக்கப்பட்ட தற்காலிக மின்கட்டணவீதம் இந்த ஒழுங்கு முறை விதிகளின்படி ஆணையத்தால் ஒப்புதலளிக்கப்பட்ட இறுதி மின் கட்டணவீதத்தை விட மேற்படுகிறவிடத்து, மின் உற்பத்தி செய்யும் நிறுமம் அல்லது, நேர்வுக்கேற்ப , மின் செலுத்தல் உரிமம்தாரர், அத்தகைய மிகைத் தொகை செலுத்திய தேதியிலிருந்தும், சரிக்கட்டல் தேதி வரையிலும் அவ்வாறு வசூலிக்கப்பட்ட மிகைத்தொகையின் மீது, மாதாந்திர அடிப்படையில் கணக்கிடப்பட்ட ஆண்டிற்கு 6 விழுக்காடு தனிவட்டி செலுத்துதல் வேண்டும் :

மேலும், வசூலிக்கப்பட்ட தற்காலிக மின்கட்டணவீதம், ஆணையத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட இறுதி மின்கட்டணவீதத்தை விட குறைவாக இருக்கிறவிடத்து, பயனாளிகள் பொருந்தத்தக்க இறுதி மின்கட்டணத் தேதியிலிருந்து அத்தகைய குறைவுத்தொகை பட்டியல் தேதி வரையிலும் குறைவான தொகையின் மீது மாதாந்திர அடிப்படையில் கணக்கிடப்பட்ட ஆண்டிற்கு 6 விழுக்காடு தனிவட்டி செலுத்துதல் வேண்டும்.

இன்னும், மிகையான / குறைவானத் தொகையோடு சேர்த்து 6% தனிவட்டி, ஆணைத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் சரிகட்டப்படுதல் வேண்டும். தவறும் பட்சத்தில், தவறுகை செய்யும் உரிமம்தாரர்/ பயனாளி, ஆணையத்தால் முடிவு செய்யப்படலாகும் விதத்தில், மிகையான/ குறைவான தொகையின் மீது தண்டவட்டி செலுத்தக் கடப்பாடுடையவர் ஆவார் “

**<u>3. முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 18ஆம் ஒழுங்குமுறைவிதியைத் திருத்தம் செய்தல்:</u>**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 18ஆம் ஒழுங்குமுறைவிதியின் 8ஆம்

உள்–ஒழுங்குமுறை விதிக்குப் பின்பு பின்வருவது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :-

" இருப்பினும், மின் உற்பத்தி நிலையத்தினை நிறுவுவதற்கு, இயக்குவதற்கு மற்றும் பராமரித்து வருவதற்கு கருதும் நபர் எவரும், 2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (தொழில் நடத்தை) ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்க மனு மூலம், திட்டத்தினைச் செயற்படுத்தும் முன்பு, திட்டத்திற்கான மூலதனச் செலவு மற்றும் நிதித் திட்டத்தை "கொள்கை" அளவில் ஏற்பதற்காக ஆணையத்தின் முன்பு விண்ணப்பம் செய்யலாம். அந்த மனு, திறன், அமைவிடம், மனையின் குறித்த வகை அம்சம்., எரிபொருள், பயனாளிகள், மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவின் கூறுகள், நிதித்தொகுப்பு, தொடங்கும் கால விவரங்கள், விலைமட்டத்தின் சுட்டுகை, அந்நியச் செலாவணி பங்கு, ஏதேனுமிருப்பின், அது, எவருக்கு மின்சாரம் விற்பனை முதலியவை செய்யப்படவிருக்கிறதோ அந்தப் பயனாளி/ உரிமம்தாரரின் இசைவு உள்ளடங்கலாகத் திட்டத்தின் சிறப்பியல்புகள் குறித்த தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும் :

இருப்பினும், ஆணையம், திட்டத்தின் மூலதனச் செலவு, மதிப்பீடுகள் மற்றும் நிதித் திட்டத்தை "கொள்கை" அளவில் ஏற்றுக்கொள்கிறவிடத்து, அதுவே, உள்ளபடியான மூலதனச் செலவினங்களை நுணுக்கமாகச் சரிபார்ப்பதற்கு விண்ணப்பிப்பதற்கான வழிகாட்டும் காரணியாக இருத்தல் வேண்டும் "

**4. முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 23ஆம் ஒழுங்குமுறைவிதியைத் திருத்தம் செய்தல்**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 23ஆம் ஒழுங்குமுறைவிதிக்குப் பதிலாக, பின்வரும் ஒழுங்குமுறைவிதி அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :-

"23 (கடன்) கடன் முதலீட்டின் மீதான வட்டி மற்றும் நிதிக் கட்டணங்கள்"

(a) கடன் மூதலீட்டின் மீதான வட்டி, 21ஆம் ஒழுங்குமுறை விதியில் விவரிக்கப்பட்டுள்ள முறையில் பெறப்பட்ட கடனின் பேரில், கடன் வாரியாகக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(b) மின் உற்பத்தி நிறுமம் / உரிமம்தாரர், பயனாளிகளுக்கு மொத்தப் பயனின் விளைவாக ஒரு குறிப்பிட்ட நிலை இருந்தால் மட்டுமே கடனுக்கு மறுநிதியளிக்க முயற்சி செய்ய வேண்டும். அத்தகைய மறு நிதியளிப்புடன் சம்பந்தப்பட்ட செலவுத் தொகையானது பயனாளிகளால் ஏற்கப்படுதல் வேண்டும்.

(c) கடன் விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்குரிய மாற்றம்,

அத்தகைய மறு–நிதியளிப்பு மற்றும் பயனாளிகளுக்கு பயன் கிடைத்த தேதியிலிருந்து பிரதிபலித்தல் வேண்டும்.

(d) பூசல் (Dispute) ஏற்படும் நேர்வில், தரப்பினர்களில் எவரும், உரிய விண்ணப்பத்துடன் ஆணையத்தை அணுகலாம். எனினும் கடனுக்கு மறுநிதியளித்தல் தொடர்பான பூசல் எதுவும் முடிவுறா நிலையிலிருக்கும்போது, மின்உற்பத்தி நிறுமம் / உரிமம்தாரருக்கு, ஆணையத்தால் ஆணையிடப்பட்ட செலுத்துகை எதனையும் பயனாளிகள் நிறுத்தி வைத்தல் ஆகாது.

(e) மின்உற்பத்தி நிறுமம் / உரிமம்தாரரால் கடன் தவணையுரிமைக் காலம் எதுவும் பயன்படுத்தப்படும் நேர்வில், கடன் தவணையுரிமை ஆண்டுகளின்போது மின் கட்டணவீதத்தில் வகை செய்யப்பட்டுள்ள தேய்மானம், அந்த ஆண்டுகளின்போது திருப்பிச் செலுத்துகையாகப் பாவிக்கப்படுதல் வேண்டும், மற்றும் கடன் முதலீட்டின் மீதான வட்டி, அதற்கிணங்க கணக்கிடப்படுதல் வேண்டும்.

(f) மின்உற்பத்தி நிறுமம் / உரிமம்தாரர் கடனுக்கு மறுநிதியளிப்பதன் பொருட்டு ஆதாயம் மற்றும் கடன் மீதான வட்டி எதுவும் பெறுதல் ஆகாது.

(g) மின் உற்பத்தி நிறுமம் / உரிமம்தாரர், தன்னுடைய உளத்தேர்வின் படி(Discretion) நிலையான வட்டி வீதமுடைய கடன்களை நடைமுறை விகிதமுடைய கடன்களாக அல்லது எதிரெதிர் மாறாக, பேரம்பேசி, மாற்றிக் கொள்ளலாம். அத்தகையவாறு பேரம் பேசி, மாற்றிக்கொண்டதன் விளைவாக அதனுடைய சொந்தச் செலவு மற்றும் ஈட்டம் அல்லது இழப்பு மின் உற்பத்தி நிறுமம் / உரிமம்தாரரை வந்தடைதல் வேண்டும்:

இருப்பினும், பயனாளிகள், நிலையான வட்டி விகிதத்தினை நடைமுறை விகிதத்திலாயினும், தொடக்கத்தில் ஒன்றாகச் சேர்க்கப்பட்ட கடனுக்கான வட்டி செலுத்தும் கடப்பாடுடையவர் ஆவார் “

**5. <u>முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 37ஆம் ஒழுங்குமுறைவிதியைத் திருத்தம் செய்தல்:-</u>**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் **37**ஆம் ஒழுங்குமுறைவிதியின் (v)ஆம் கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

“ (v) துணை மின் ஆற்றல் நுகர்வு.

(a) நிலக்கரி அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையம்.

| | குளிர்விக்கும் கோபுரத்துடன் | குளிர்விக்கும் கோபுரம் இல்லாமல் |
|---|---|---|
| (i) 200 MW தொடர். | 9.0% | 8.5% |
| (ii) 500 MW தொடர். | | |

| | | |
|---|---|---|
| நீராவி சுழலி கொதிகலன் ஊட்ட இறைப்பிகள் | 9.5% | 7.0% |
| மின்சுழலி கொதிகலன் ஊட்ட இறைப்பிகள் | 9.0% | 8.5% “ |

**(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)**

**ஆர். பாலசுப்பிரமணியன்**
செயலாளர்